2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஈ) வடலூர் தொழிற்சாலை லே-ஆஃப் பிரச்சினை குறித்து.

*திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றோடு இந்தக் கூட்டத்தொடர் முடிகிறது. ஏராளமான ஒத்திவைப்புத் தீர்மானங்களை நாங்கள் கொடுத்திருக்கிறோம். அதனாலேதான் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேராகச் செய்திக்கு வாருங்கள். முன்னுரை எல்லாம் வேண்டாம்.

திரு. சி. கோவிந்தராஜன் : தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் சம்பந்தமான சில பிரச்சினைகளை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் மற்றும் முதலமைச்சரின் கவனத்திற்கும் நான் கொண்டு வந்து உரிய நடவடிக்கை எடுக்கக் கோருகிறேன். வடலூர் சம்பந்தமான பிரச்சினை குறித்து ஏற்கனவே இந்த மன்றத்தில் எழுப்பப்பட்டிருக்கிறது. மூன்று மாத காலத்திற்கு அவர்கள் லே-ஆஃப் கேட்டு அது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதுவே சட்டவிரோதமானது. இந்த சட்ட விரோதமான லே-ஆஃப் என்பதை 8 மாத காலமாகத் தொடருகிறார்கள். இது சட்டவிரோத லே-ஆஃப் என்று அறிவிப்பதற்கு அரசு முன்வரவில்லை. தொழிலாளர் இலாக்காவும் எழுதியாகிவிட்டது.

இன்றைக்கு அங்கேயுள்ள நிலைமை என்ன? தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். முதலமைச்சர் அவர்களும் மார்ச் மாதம் 28 ஆம் தேதியன்று இந்த லே-ஆஃபை எடுத்துவிடுவோம் என்ற உறுதியை இந்த மன்றத்திற்கு அளித்தார்கள். அங்கேயுள்ள தொழிலாளர்கள் முதலமைச்சரின் இந்த வாக்குறுதி பற்றியே என்ன என்று நினைக்கிறார்கள். முதலமைச்சர் வாக்குறுதி கொடுத்த பிறகும் கூட ஒன்றும் நடைபெறவில்லையே என்று பசியாலும், பட்டினியாலும் வாடுகின்ற அந்தத் தொழிலாளர்களும், தொழிலாளர்களின் குடும்பத்தாரும் கேட்கிறார்கள்.

இதற்கு ஒரே ஒரு சிறு உதாரணத்தைச் சொன்னால் போதும். அங்கே உள்ள பட்டினி நிலைமை எப்படி இருக்கிறது என்பதைச் சொல்கிறேன். கடந்த பல மாதங்கள் அங்கே சம்பளம் கிடையாது. குழந்தைக்கு ஜுரம் இருக்கிறது என்பதற்காக 'பிரட்' வாங்க முடியாமல் ஒரு மலிவு விலை ரொட்டித் துண்டைத் தாய் வாங்கி வைத்திருந்தாள். வெளியே சென்று வந்த கணவன், பசியால் வாடி வந்ததால் அந்த ரொட்டித் துண்டை எடுத்துச் சாப்பிட்டுவிட்டான். தாய் வந்து பார்த்தவுடன் அந்த ரொட்டித் துண்டைக் காணவில்லை. குழந்தைக்கு உடல் நலம் சரியாக இல்லை என்ற காரணத்திற்காக ரொட்டித் துண்டை வாங்கி வைத்தேன். அதையும் சாப்பிட்டு விட்டீர்களே என்று சொல்லி

அந்தக் குடும்பத்திலே சண்டை சச்சரவு ஏற்பட்டது. இப்படிப் பட்ட நிலைமை அங்கே ஒவ்வொரு குடும்பத்திலும் இருந்து கொண்டிருக்கிறது. அவ்வளவு அவசரம் அவசரமாக அந்த லே-ஆப்புக்கு அனுமதி அளித்து தொழிலாளர் நல இலாக்கா இது சட்ட விரோதமானது என்று கூடச் சொல்வதற்கு முன்வரவில்லை. எனவே, அந்த சட்ட விரோத லே ஆஃப்-ஐ ரத்து செய்து அந்தக் குடும்பங்களைப் பாதுகாத்திட வேண்டும். அதேமாதிரி ஆரோ ஃபுட் தொழிற்சாலையில் இருக்கக்கூடிய அந்தத் தொழிலாளர்கள் ஒரு மாத காலமாக.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'Mention' என்றால் ஒரு பிரச்சினைதான். இது தொடர் சொற்பொழிவல்ல. தொழில் மானியத்திலா பேசுகிறோம். ஒரு பிரச்சினையைச் சொல்லுங்கள். இருக்கிற மூன்றையும் பேசுகிறீர்களே.

10-40 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்த ராஜன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை பற்றி ஏற்கெனவே தெள்ளத் தெளிவாக இந்த சபையிலேயே விளக்கியிருக்கிறோம். அவர்கள் எழுப்பிய பிரச்சினையில் ஒன்று, 'லே-ஆப்' விடக் கூடாது, அத்தனை தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பு உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அரசின் சார்பாகவும், அந்தத் துறையினுடைய அதிகாரிகளுக்கு உத்திரவிடப்பட்டு, அவர்களுக்கு 'லே-ஆப்' வழங்கியது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

மீண்டும் அந்தத் தொழிலாளர்களுக்கு அந்த நிர்வாகம் ஏன் வேலை தரவில்லை என்றும், காலதாமதம் எதனால் ஏற்பட்டது என்பது குறித்தும் விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. இறுதி யாக ஆணையர் அவர்கள் 27—8—1990 அன்று இந்த விசாரணையை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த விசாரணை முடிவில் தக்க நடவடிக்கைகள் அவர்கள் மீது எடுக்கப்படும். இருந்தாலும் அந்தத் துறையினுடைய அதிகாரிகள் தொடர்ந்து நிர்வாகத்தை வற்புறுத்தியபோது,அந்த நிர்வாகத்தினர் தொடர்ந்து எங்களுடைய அந்த ஆலை நஷ்டத்தில் இயங்குகிற காரணத்தால், எங்களால் வேலை வாய்ப்பு அளிக்க முடியாத நிலை இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

அப்படிச் சொன்னாலும், சம்பளம் கூட ஒழுங்காக மாதா மாதம் கொடுக்கவில்லையே, அதையாவது தரவேண்டுமென்று சொல்லி அதிகாரிகள் சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறோம்.

இறுதியாக 27-ந் தேதி நடைபெறுகிற பேச்சுவார்த்தை முடிந்த பின்பு அரசின் சார்பாக கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.